Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, டிசம்பர் 06, 2024 | இதழ் 237

# அரசுக்கு அவப்பெயர் உண்டாக்க நினைக்கும் ஜாதி, மதவெறி சக்திகள்: முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை

## "சமூகத்தை பிளவுபடுத்துவோரை மக்களிடம் அம்பலப்படுத்துவோம்; எதிர்நீச்சல் போட்டு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம்"

சென்னை, 06 நவம்பர் 2024: தமிழ்நாட்டில் திராவிட மாடல் திமுக அரசுக்கு அவப்பெயர் உண்டாக்க நினைக்கும் சாதிவெறி மதவெறி சக்திகளுக்கு முதல்வர் ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்தார்.

''சமூகத்தை பிளவுபடுத்துவோரை மக்களிடம் அம்பலப்படுத்துவோம்; எதிர்நீச்சல் போட்டு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம்'' என்று அவர் உறுதிபட கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை, ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற, தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின் கீழ் தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் வழங்குதல் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பேசியதாவது:

என் பாசத்துக்குரிய எழுச்சித் தமிழர் நம்முடைய திருமாவளவன் வைத்த கோரிக்கையை ஏற்று, அம்பேத்கர் மணிமண்டபத்தில், முழு உருவ வெண்கலச் சிலையை நான் திறந்து வைத்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசாசின் கோரிக்கையை ஏற்று, அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை தமிழில் மொழிபெயர்த்து அதை வெளியிடக்கூடிய அறிவிப்பும் செய்யப்பட்டிருக்கிறது. செம்பதிப்பாக அது விரைவில் வெளிவரயிருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்வதுடன், நம்முடைய கடமை முடிந்துவிட்டதாக என்று நான் கருதவில்லை. சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், சகோதரத்துவம், பெண்ணுரிமை, ஒடுக்கப்பட்டோர் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிடவியல் கோட்பாடுகளை சட்டரீதியாக மாற்றி கொள்கைகளை ஆட்சி நெறிமுறைகளாக ஆக்கவேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காக தொடர்ந்து உழைக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றாத, புதுமை திட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம். சமூகநீதி வழியாக, சமத்துவ சமுதாயத்தை படைக்க பாடுபடுகிறோம்! நம்முடைய இலட்சிய பயண வழியில் ஒரு சில தடைகள், இடர்பாடுகள் இருப்பதை நான் மறுக்கவில்லை. உடனே அதை மட்டும் சிலர் பெரிதுப்படுத்தி, அரசியலாக பார்க்க என்னென்ன பேசுகிறார்கள். "இதுதான் பெரியார் மண்ணா? இதுதான் அம்பேத்கர் மண்ணா?" என்று கேள்வி கேட்கிறார்கள்.

ஒரு இடத்தில் நடந்த சம்பவத்தை முழுமையாக புரிந்துக்கொள்ளாமல், அதில் அரசின் செயல்பாடுகளை தெரிந்துக்கொள்ளாமல், தெரிந்திருந்தாலும், திட்டமிட்டு வதந்திகளை பரப்பி, நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு அவப்பெயர் உண்டாக்கவேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது; உங்கள் மதவெறி சாதி வெறி எண்ணம் இந்த பெரியார் மண்ணில், அம்பேத்கர் கொள்கைகள் உரம் பெற்று இருக்கும் மண்ணில் ஒருபோதும் நிறைவேறாது, ஒருபோதும் நிறைவேறாது. இந்த ஸ்டாலின் இருக்கும் வரை உங்களால் அதை நிறைவேற்றவும் முடியாது.

தந்தை பெரியாரும், புரட்சியாளர் அம்பேத்கருமே தாங்கள் வாழ்ந்த காலத்தில் இதுபோன்ற பல நெருக்கடிகளை எதிர்கொண்டு, எதிர்நீச்சல் போட்டுதான் இலட்சியப் பயணத்தை தொடர்ந்தார்கள். அவர்களின் கொள்கை வழி நடக்கும் நம்முடைய அரசும், சமூகத்தில் நிலவும் இடர்பாடுகளை நீக்கி, சமூகத்தை பிளவுபடுத்தும் சக்திகளை மக்களிடம் அம்பலப்படுத்தி, சமூகநீதிக் கொள்கையை நிலைநாட்டி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம்! இதுதான் தந்தை பெரியார் மீதும், புரட்சியாளர் அம்பேத்கர் மீதும் நாங்கள் எடுக்கும் உறுதிமொழி!

ஆதிதிராவிடர் பழங்குடியினர் விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றிய நான் ஐந்து இலக்குகளை குறிப்பிட்டேன்.

முதல் இலக்கு, கல்வி, வேலைவாய்ப்பில் அவர்கள் உரிய இடங்கள் பெறவேண்டும்!

இரண்டாவது இலக்கு, சமூக அமைப்பில் அவர்கள் எந்தச் சூழலிலும் புறக்கணிக்கப்படக் கூடாது!

மூன்றாவது இலக்கு, எக்காரணம் கொண்டும் சாதியின் பெயரால் தடுக்கப்படக் கூடாது!

நான்காவது இலக்கு, அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்து மட்டத்திலும் அவர்கள் வளர்ச்சி உறுதிசெய்யப்படவேண்டும்!

ஐந்தாவது இலக்கு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும்!

இந்த சிந்தனைகள் கொண்ட அரசாகதான் தி.மு.க. அரசு தொடர்ந்து செயல்படுகிறது! இனியும் செயல்படும்! செயல்படும்! என அம்பேத்கரின் நினைவு நாளில் உறுதி கூறுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# பார்லிமெண்டில் காங்கிரஸ் எம்.பி அபிஷேக் சிங்வி இருக்கைக்கு அடியில் பணக்கட்டு கண்டுபிடிப்பு

சென்னை, 06 நவம்பர் 2024: காங்கிரஸ் எம்.பி அபிஷேக் மனு சிங்வி இருக்கைக்கு கீழே பணம் கண்டெடுக்கப்பட்டு உள்ளதாக ராஜ்யசபா தலைவர் ஜெகதீப் தன்கர் தெரிவித்துள்ளார்.



பார்லிமெண்ட் குளிர்கால கூட்டத் தொடர் கடந்த மாதம் 25 ந்தேதி துவங்கி நடைபெற்று வருகிறது. கூட்டம் துவங்கியதில் இருந்து, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று காலை 11 மணிக்கு இரு அவைகளும் கூடி இன்றைய அலுவல் நேரங்கள் நடைபெற்றது. எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக, மக்களவையை டிசம்பர் 9ம் தேதி காலை 11 மணி வரை ஒத்திவைத்து சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார்.

ராஜ்யசபை கூடியதும், தெலுங்கானாவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட, காங்கிரஸ் எம்.பி., அபிஷேக் மனு சிங்வி மீது சபாநாயகர் ஜெகதீப் தன்கர் புகார் ஒன்றை கூறினார். அவர் கூறியதாவது: காங்கிரஸ் எம்.பி., அபிஷேக் மனு சிங்விக்கு ஒதுக்கிய இருக்கையில் இருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ராஜ்யசபைக்குள் பணம் வந்தது எப்படி? பின்னணியில் வேறு காரணம் உள்ளதா? என விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது. நேற்று அவை நடவடிக்கைகள் முடிந்த பின் நடந்த சோதனையில் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே கூறுகையில், 'விசாரணை முடிந்து, சம்பவத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் வரை, ஒரு உறுப்பினரின் பெயரை வெளியிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்' என வலியுறுத்தினார்.

ராஜ்யசபையில், மத்திய அமைச்சர் ஜே.பி., நட்டா கூறியதாவது: இது சபையின் கண்ணியத்தை புண்படுத்துகிறது. விரிவான விசாரணை நடத்தப்படும் என்று அவை தலைவர் கூறியதால், உண்மை வெளிவரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது, என்றார்.

இந்த குற்றச்சாட்டு குறித்து, அபிஷேக் மனு சிங்வி கூறியதாவது: நான் நேற்று ராஜ்யசபைக்கு செல்லும் போது ஒரே ஒரு 500 ரூபாய் நோட்டு மட்டுமே எடுத்து சென்றேன். 12.57 மணிக்கு அவைக்குள் நுழைந்தேன். 1 மணிக்கு அவை கலைந்து விட்டது. 1.30 மணி வரை கேண்டீனில் இருந்தேன். அதன் பிறகு பார்லிமெண்டில் இருந்து கிளம்பி விட்டேன். இந்த விவகாரம் பற்றி, இப்போது தான் முதல்முறையாக கேள்வி படுகிறேன்.


ஒவ்வொரும் எம்.பி.,யும் இருக்கையை பூட்டி சாவியை எடுத்து செல்லக்கூடிய வகையில் இருக்கை இருந்தால் இந்த குற்றச்சாட்டை முன்வைக்கலாம். பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக நடந்து இருக்கிறதா என்று விசாரிக்க வேண்டும். இது குறித்து தவறு இருந்தால் முழுமையாக அம்பலப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.






# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: 6.5 சதவீதமாகவே தொடர்கிறது ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் அறிவிப்பு

சென்னை, 06 நவம்பர் 2024: 'வங்கிகளுக்கான குறுகிய காலக் கடனுக்கான ரெப்போ வட்டி விகித்தில் மாற்றமில்லை. 6.5 சதவீதம் ஆகவே தொடரும்' என ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளார்.



ரெப்போ விகிதம் என்பது மற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம் ஆகும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் ரெப்போ வட்டி விகிதத்தில், 11வது முறையாக மாற்றம் செய்யப்படவில்லை.

இது குறித்து மும்பையில் செய்தியாளர்கள் சந்திப்பில் சக்திகாந்த தாஸ் கூறியதாவது:

கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் ஆரோக்கியமான முறையில் வளர்ந்து வருகிறது. ஆர்பிஐ மற்றும் நிதிக் கொள்கைக் குழுவின் முடிவுகள் முறையாக பின்பற்றப்படுவதே இதற்குக் காரணம். உயர் பணவீக்கம் மற்றும் ஜிடிபி சரிவுக்கு மத்தியில் ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 6.5 சதவீதமாக வைத்துள்ளது. கொள்கையின் நடுநிலை நிலைப்பாட்டைத் தொடரவும், பணவீக்கம் மற்றும் வளர்ச்சியைப் பற்றிய கண்ணோட்டத்தைக் கண்காணிக்கவும் வட்டி விகிதம் மாறாமல் வைக்கப்பட்டுள்ளது. கடைசியாக 2023 பிப்ரவரியில் ரெப்போ விகிதங்களை 6.5% ஆக எம்பிசி உயர்த்தியது.

வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில் பணவீக்கம் 4% என்ற அளவில் இருப்பதில் கவனம் செலுத்தவும் நிதிக் கொள்கை குழு ஒருமனதாக முடிவு செய்துள்ளது. வளர்ச்சி வேகத்தில் சமீபத்திய மந்த நிலையை கவனத்தில் கொண்டுள்ளது. இந்த ஆண்டின் 2 ம் பாதியிலும், அடுத்த ஆண்டும் வளர்ச்சி மீள்தன்மையுடன் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஆர்பிஐ சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நெகிழ்வான பணவீக்க இலக்கு கட்டமைப்பைப் பின்பற்றுவதே எங்கள் நோக்கம். வளர்ச்சியை ஆதரிக்கும் அதே வேளையில் விலை ஸ்திரத்தன்மையைப் பேணுவதே ஆர்பிஐயின் திட்டம். பொருளாதாரத்தின் ஒவ்வொரு பிரிவிற்கும் விலை நிலைத்தன்மை முக்கியமானது. அதே நேரத்தில் வளர்ச்சியும் மிக முக்கியமானது.


இந்தியாவில் வளர்ச்சி மற்றும் பணவீக்கப் பாதைகளில் சமீபத்தில் சில பிறழ்வுகள் இருந்தபோதிலும், பொருளாதாரம் முன்னேற்றத்தை நோக்கி நிலையான மற்றும் சீரான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என தெரிவித்தார்.

பணவீக்க விகிதம் உயர்வு, பொருளாதார வளர்ச்சி குறைந்தது போன்ற காரணங்களால் 11வது முறையாக வட்டி விகிதத்தில் மாற்றமில்லை.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளி, டிசம்பர் 06, 2024

## பொங்கல் பண்டிகை ரேஸில் முதல் படமாக களமிறங்கிய 'வணங்கான்'
## தமிழர் திருநாள் கொண்டாட்டமாக ஜனவரி-10 ல் வெளியாகும் வணங்கான்




சென்னை, 06 நவம்பர் 2024: சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் தயாரிப்பில், பாலாவின் இயக்கத்தில் உருவாகி வரும் படம் 'வணங்கான்'. அருண் விஜய் கதாநாயகனாக நடிக்க கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். நாயகி ரித்தா மற்றொரு நாயகியாக நடித்துள்ளார். முக்கிய வேடங்களில் சமுத்திரக்கனி, மிஷ்கின், ராதாரவி, ஜான் விஜய், ரவிமரியா, சிங்கம்புலி, அருள்தாஸ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். வரும் பொங்கல் பண்டிகை வெளியீடாக வரும் ஜன-10 ஆம் தேதி முதல் திரையரங்குகளில் 'வணங்கான்' திரைப்படம் ரிலீஸாக இருக்கிறது. பொங்கல் வெளியீட்டு பட்டியலில் எந்தெந்த படங்கள் இடம்பிடிக்கவிருக்கின்றன என்கிற அறிவிப்புகள் எதுவும் இதுவரை உறுதியாகாத நிலையில் 'வணங்கான்' படத்தின் ரிலீஸ் முதல் அறிவிப்பாக வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது. அதற்கு கட்டியம் கூறும் விதமாக மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தபடத்தில் இருந்து அருண் விஜய் ஒரு கையில் பெரியார் சிலையும், ஒரு கையில் விநாயகர் சிலையையும் எடுத்து வரும் சில நொடிக் காட்சிகளையும் தற்போது படக்குழு வெளியிட்டுள்ளது. பாடல்களுக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க பின்னணி இசையை சாம் சி.எஸ் அமைத்துள்ளார்.. பாடல்களை கவிப்பேரரசு வைரமுத்து எழுதுகிறார். ஒளிப்பதிவை ஆர்.பி.குருதேவ் மேற்கொள்ள படத்தொகுப்பை சதீஷ் சூர்யா கவனிக்கிறார். கலை இயக்குநராக ஆர்.பி.நாகு பொறுப்பேற்றுள்ளார். ஆக்சன் காட்சிகளை ஸ்டண்ட் சில்வா வடிவமைத்துள்ளார். 'மாநாடு' என்கிற பிளாக் பஸ்டர் வெற்றிப் படத்தை தொடர்ந்து வி ஹவுஸ் நிறுவனம் தயாரிக்கும் படம் என்பதுடன், இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் ஆறு வருட இடைவெளிக்கு பிறகு வெளியாகும் படம் என்பதாலும் இந்தப்படம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே ரசிகர்களிடம் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மக்கள் தொடர்பு; ஏ.ஜான்

## திரைப்படங்களின் விமர்சனங்களை பேஸ்புக், எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம், யூ-டியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் பதிவிட திரைப்படம் வெளியான மூன்று நாட்களுக்கு தடை விதிக்க வேண்டும்

சென்னை, 06 நவம்பர் 2024: திரைப்படங்களின் விமர்சனங்களை பேஸ்புக், எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம், யூ-டியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் பதிவிட திரைப்படம் வெளியான மூன்று நாட்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்ற, நீதிமன்றத்தில் நமது சங்கத்தின் கோரிக்கை, சமீப காலங்களில் சில ஊடகங்கள் தனிப்பட்ட வன்மத்துடன், சில திரைப்படங்களுக்கு எதிராக விமர்சனம் செய்து வருவதையும், தனி மனித தாக்குதல் செய்து வருவதையும் தடுக்கவே தவிர, ஒட்டுமொத்தமாக அனைத்து ஊடகங்களுக்கும் எதிரானது அல்ல. அப்படிப்பட்ட சிலரை மட்டுமே தடுக்க முடியாத காரணத்தினால் தான், ஒட்டுமொத்தமாக மூன்று நாட்களுக்கு விமர்சனங்கள் வெளியிட தடை கேட்டு நீதிமன்றம் சென்று இருக்கிறோம். இதே காரணத்திற்காகத்தான் , ஏற்கனவே மலையாள திரைப்பட உலகமும் நீதிமன்றம் சென்றுள்ளது.

பாரம்பரியமான பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் அவர்களின் இணையதளங்களில் எப்போதும் திரைப்படங்களை, திரைப்படம் சம்பந்தப்பட்டவர்களை தரம் தாழ்த்தி விமர்சிப்பது இல்லை. சில ஊடகங்கள்/ஊடகவியலாளர்கள் தவிர, மீதம் அனைத்து ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் திரைப்பட உலகிற்கு ஆதரவாக இருக்கிறார்கள், பல திரைப்படங்களின் வெற்றிகளுக்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் பல முறை திரைப்பட நிகழ்வுகளில் சொல்லி இருக்கிறோம். மீண்டும் இங்கு சொல்லவும் விரும்புகிறோம். நமது சங்கத்தின் இந்த முயற்சி அனைத்து ஊடகங்களுக்கும் எதிரானது அல்ல. ஒட்டுமொத்தமாக அனைவரையும் புறக்கணிப்பது நமது சங்கத்தின் நோக்கம் இல்லை.

அதே போல, அப்படிப்பட்ட நடுநிலையான ஊடகங்களின் ஆதரவை எதிர்பார்த்திருக்கும் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கும் எதிரானது அல்ல நமது சங்கத்தின் இந்த செயல்பாடு. எனவே வழக்கு மன்றத்தில் இது குறித்து ஒரு சரியான வழிமுறை வரும் வரை, தயாரிப்பாளர்கள் அந்த திரைப்படத்திற்கான பி ஆர் ஓ-வுக்கு பரிந்துரைக்கும், டெலிவிஷன், பத்திரிக்கை, யூ-டியூப் சேனல்கள், வலைத்தளங்கள், சோசியல் மீடியா இன்ப்ளூயன்சர்கள், பிரஸ் ஷோ-வுக்கு வந்து, திரைப்படங்களை பார்த்து விமர்சனங்களை வெளியிடுவதில், எந்த எதிர்ப்பும் நமது சங்கத்தில் இருந்து இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். எனவே திரைப்பட தயாரிப்பாளரின் அனுமதியோடு பிரஸ் ஷோ-வுக்கு மேலே குறிப்பிட்டவர்கள் வந்து திரைப்படங்களை பார்த்து விமர்சனம் செய்யலாம். விரைவில் சட்டரீதியாக, நீதிமன்றத்தில் இதற்கு ஒரு தீர்வும் எட்டப்படும் என்று நம்புகிறோம். தயாரிப்பாளர்களின் நலன் காக்கவே நமது சங்கம் இந்த முயற்சியை எடுத்துள்ளது. எனவே, இந்த விளக்கத்தையும், செயல்முறையையும், தயாரிப்பாளர்கள் சரியான முறையில் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். நன்றியுடன், தமிழ் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர் சங்கம் சார்பில், டி.ஜி. தியாகராஜன் செயல் தலைவர் டி. சிவா பொதுச் செயலாளர்.

## விவசாயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உருவாகியுள்ள 'பரமன்'



சென்னை, 06 நவம்பர் 2024: இன்ஃபினிட் பிக்சர்ஸ் சார்பில் யி சபரிஷ் தயாரித்து இயக்கியுள்ள படம் 'பரமன்' விவசாயிகளின் வாழ்வியலை மையப்படுத்தி உருவாகியுள்ள இப்படத்தில் ஜெய்பீம், பரியேறும் பெருமாள் உள்ளிட்ட பல படங்களில் குணச்சித்திர நடிகராக நடித்துள்ள சூப்பர் குட் சுப்பிரமணி கதையின் நாயகன் 'பரமன்' ஆக நடித்திருக்கிறார்.

பழ கருப்பையா வில்லனாக நடிக்க, இதுவரை பார்த்திராத ஒரு சீரியஸான கதாபாத்திரத்தில் வையாபுரி நடித்துள்ளார். மேலும் ஹலோ கந்தசாமி, விஜே அர்ச்சனா, மீசை ராஜேந்திரன், அசோக் தமிழ், சத்யா, ஜெயச்சந்திரன், கார்த்திக் பிரபு, சஞ்சய், மது உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

தமீம் அன்சாரி இசையமைத்திருக்கும் இப்படத்திற்கு சிபி சதாசிவம் ஒளிப்பதிவு செய்ய, படத்தொகுப்பை இயக்குநர் சபரிஷே மேற்கொண்டுள்ளார். படத்தின் கதையை இதய நிலவன் எழுதியுள்ளார். பாடல்களை வேல்முருகன், முகேஷ் ஆகியோர் பாடியுள்ளனர்.

தனது முதல் படத்தில் கால் சென்டரில் நடக்கும் நிகழ்வுகளை வைத்து படமாக்கிய இயக்குநர் சபரிஷ், அதற்கு முற்றிலும் மாறாக இந்த 'பரமன்' படத்தில் விவசாயிகளின் வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளை கையில் எடுத்துள்ளார்.

இதுகுறித்து இயக்குநர் ஜெ சபரிஷ் கூறும்போது, "விவசாயத்தை மையப்படுத்தி வெளியாகியுள்ள படம் என்பதால் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உட்பட பல ஜாம்பவான் இயக்குனர்கள் படம் பார்த்துவிட்டு படத்தை சிலாகித்து பாராட்டினார்கள். விவசாயம் அழிந்துகொண்டு வரும் இந்த காலகட்டத்தில் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இப்படி ஒரு படம் வருகிறது. விவசாயத்தை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள பாடகர் வேல்முருகன் பாடியுள்ள 'கொண்டாட்டம் கும்மாளம் சந்தோஷமே' என்கிற பாடல் ஏற்கனவே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதேபோன்ற ஆதரவு படத்திற்கும் மக்களிடம் இருந்து கிடைக்கும் என நம்புகிறோம்" என்கிறார். நடிகர்கள்

சூப்பர் குட் சுப்பிரமணி, பழ. கருப்பையா, வையாபுரி, ஹலோ கந்தசாமி, விஜே அர்ச்சனா, மீசை ராஜேந்திரன், அசோக் தமிழ், சத்யா, ஜெயச்சந்திரன், கார்த்திக் பிரபு, சஞ்சய், மது மற்றும் பலர்

தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம் தயாரிப்பு ; இன்ஃபினிட் பிக்சர்ஸ் இயக்கம் ; ஜெ சபரிஷ் கதை ; இதயநிலவன் இசை ; தமீம் அன்சாரி ஒளிப்பதிவு ; சிபி சதாசிவம் படத்தொகுப்பு ; ஜெ சபரிஷ் பாடகர்கள் ; வேல்முருகன், முகேஷ் மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்.

## புயல் மற்றும் கனமழை காரணமாக டிசம்பர்-27க்கு மாற்றி வைக்கப்பட்ட 'ராஜா கிளி' ரிலீஸ்




சென்னை, 06 நவம்பர் 2024: 'மிக மிக அவசரம்', 'மாநாடு' படங்களின் வெற்றியைத் தொடர்ந்து தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவாகி இருக்கும் படம் 'ராஜா கிளி'. கதை, வசனம், பாடல்கள், இசையமைப்பு என நடிகரும் இயக்குநருமான தம்பி ராமையாவின் கைவண்ணத்தில் உருவாகி இருக்கும் இந்த படத்தின் மூலம் அவரது மகனான நடிகர் உமாபதி ராமையா இயக்குநராக அறிமுகம் ஆகிறார். தம்பி ராமையா இந்த படத்தில் கதைநாயகனாக நடிக்க அவரது வெற்றி கூட்டணியாக வலம் வரும் நடிகர் சமுத்திரக்கனி இந்த படத்தில் இன்னொரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, பாடகர் கிரிஷ், வெற்றிக்குமரன், இயக்குநர் மூர்த்தி, ஷ்வேதா ஷிரிம்டன், சுபா, பிரவீன், முபாஸிர், சாட்டை துரைமுருகன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

வரும் டிசம்பர் 13-ஆம் தேதி இந்த படம் திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக சமீபத்தில் இந்த படத்தின் டிரைலர் வெளியீட்டு விழாவின் போது அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில தினங்களாக பெஞ்சல் புயல் காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்கள் கன மழையால் பாதிக்கப்பட்டு மக்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாகி உள்ளனர். மேலும் இந்த பாதிப்பில் இருந்து மீண்டு வருவதற்குள் வரும் டிசம்பர் 13-ஆம் தேதி மீண்டும் ஒரு கனமழைக்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் வானிலை மையத்தில் இருந்து ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

இந்த மழை நாட்களில் மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை சமாளிக்கவே போராடும் சூழ்நிலையில் 'ராஜா கிளி' படத்தை டிசம்பர் 13-ல் வெளியிடுவது சரியாக இருக்காது எனக் கருதிய படத்தின் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி இதன் ரிலீஸ் தேதியை டிசம்பர் 27 ஆம் தேதிக்கு மாற்றி வைத்துள்ளார்.

'ராஜா கிளி' இன்றைய காலத்திற்கு ஏற்ற 'ரத்தக்கண்ணீர்' போன்ற ஒரு நல்ல கருத்தம்சம் கொண்ட படம் என்பதால் மக்கள் இந்த படத்தை தங்கள் பிரச்சனைகளை மறந்து திரையரங்குகளில் பார்த்து ரசிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ரிலீஸ் தேதி மாற்றம் என்றும் தயாரிப்பாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏ.ஜான் பி.ஆர்.ஓ.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# கிரிசில் நிறுவனம், வேதாந்தா நிறுவனத்தின் கடன் மதிப்பீட்டை ஏ ஏ க்கு தரம் உயர்த்துகிறது

சென்னை, 06 நவம்பர் 2024: கிரிசில் ஆனது வேதாந்தா நிறுவனத்தின் நீண்ட கால வங்கி வசதிகள் மற்றும் கடன் பத்திரங்கள் மீதான அதன் மதிப்பீட்டை 'ஏ ஏ-' இலிருந்து 'ஏ ஏ' ஆக தரம் உயர்த்தியது, அதே வேளையில் குறுகிய கால மதிப்பீட்டை ஏ1+ இல் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

"இந்த மதிப்பீட்டு தரம் உயர்த்தல், வேதாந்தா நிறுவனத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு இலாபத்தில் (வட்டி, வரி, தேய்மானம் மற்றும் கடனடைப்புக்கு முந்தைய வருவாய் எதிர்பார்க்கப்படும் காணக்கூடிய முன்னேற்றம் மற்றும் மேம்பட்ட மூலதன அமைப்புடன் கடன் குறைப்பு மற்றும் மதிப்பீட்டு வரம்புகளுக்கு கீழே செல்லும் திறன் ஆகியவற்றிற்கு காரணியாக இருக்கிறது." என்று கிரிசில் அதன் மதிப்பீடு அடிப்படை கோட்பாடுகளில் தெரிவித்தது.

2025 நிதியாண்டில் வேதாந்தா நிறுவனத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு இலாபம் வி ஆர் எல் க்கான பிராண்ட் மற்றும் நிர்வாகக் கட்டணங்களைத் தவிர்த்து) ரூபாய் 45,000 கோடிக்கும் அதிகமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது முக்கியமாக அலுமினியம், சர்வதேச துத்தநாகம் மற்றும் இரும்புத் தாதுப் பிரிவுகள், துத்தநாகம் மற்றும் அலுமினியம் மற்றும் ஆரோக்கியமான உலோக விலைகளில் அதிகரிக்கப்பட்ட செலவு செயல்திறன்கள் ஆகியவற்றின் அளவு வளர்ச்சியால் ஆதரிக்கப்படுகிறது. 2026 நிதியாண்டில் குறிப்பாக அலுமினிய வணிகத்தில் திறன் அதிகரிப்பு மற்றும் இயக்க திறன் மேம்பாட்டிற்கான நடப்பு மூலதனச் செலவினங்களின் (நீ ணீ ஜீ மீ ஜ்) எதிர்பார்க்கப்படும் நிறைவுடன் எபிட்டா மேலும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்தது. கடந்த மூன்று மாதங்களில் ஒரு பெரிய கிரெடிட் ஏஜென்சியால் வேதாந்தாவிற்கு வழங்கப்பட்ட இரண்டாவது தரம் உயர்த்தல் இது ஆகும். செப்டம்பரில், இக்ரா ஆனது வேதாந்தா லிமிடெட்டின் நீண்ட கால கடன் மதிப்பீட்டை நிறுவனத்தின் பலப்படுத்தப்பட்ட கடன் விவரத்தை குறிக்கின்ற வகையில் ஏ ஏ- இலிருந்து ஏ ஏ ஆக தரம் உயர்த்தியது.

அதன் மதிப்பீட்டுக் கோட்பாட்டில், கிரிசில் ஆனது இருப்புநிலைக் குறிப்பை கடன் குறைப்பு செய்வதற்கும் மற்றும் நிதி நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்குமான வேதாந்தாவின் நகர்வுகளில் கவனத்தில் கொண்டுள்ளது. "வி ஆர் எல் இல் மற்றும் செயல்பாட்டு நிலைகளில் இருப்புநிலைக் குறிப்பைக் கடன் குறைப்பில் அதிக கவனம் செலுத்துவது குறித்து உருவாக்குநர்களும் குழு நிர்வாகமும் வெளிப்படுத்தி வருகின்றனர். 2025 நிதியாண்டிற்குப் பிறகும் வேதாந்தாவின் நிகரக் கடன் தொடர்ந்து குறையும் என்று எதிர்பார்க்கும் போது, "வேதாந்தாவின் கியூ ஐ பி மற்றும் ஓ எஃப் எஸ் போன்ற சமீபத்திய நிதி திரட்டல் நிகழ்வுகளிலும், வி ஆர் எல் இன் பங்கு விற்பனையிலும் இந்த உறுதிப்பாடு பிரதிபலித்தது, இது ஏப்ரல்-ஆகஸ்ட் 2024 இல் இந்த குழுமத்தால் 1.9 பில்லியன் அமெரிக்க டாலர்களின் ஒட்டுமொத்த நிதி திரட்டலை விளைவித்தது. " என்று இந்த மதிப்பீட்டு நிறுவனம் கூறியது. வேதாந்தா நிறுவனத்தின் கமாடிட்டி வணிகத்தில் சுழற்சித் தன்மையைத் தாங்கும் திறன் மற்றும் குறைந்த உற்பத்திச் செலவு ஆகியவை மதிப்பீட்டு நிறுவனத்தால் முன்னிலைப்படுத்தப்பட்ட மற்றொரு முக்கிய காரணிகளாகும். "இந்த வேதாந்தா குழுமம் துத்தநாகம், ஈயம், வெள்ளி, அலுமினியம், எண்ணெய் மற்றும் எரிவாயு, இரும்புத் தாது, மின்சாரம் மற்றும் எஃகு போன்ற பல்வேறு வணிகங்களில் செயல்படுகிறது. இந்த அனைத்து பிரிவுகளிலும் மிகப்பெரிய உற்பத்தியாளர்களிடையே இந்தக் குழுமம் உள்ளது, இதனால் உள்நாட்டு சந்தையில் ஒரு வலுவான நிலைப்பாட்டைப் பெற்றுள்ளது. ஒரு நன்கு பன்முகப்படுத்தப்பட்ட வணிக இடர் விவரக்குறிப்பு இந்தக் குழுமத்தை பொருட்கள் சார்ந்த அபாயங்கள் மற்றும் சுழற்சித்தன்மை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கிறது." என்று கிரிசில் தெரிவிக்கிறது.

# ஸ்டார் அக்ரிவேர்ஹவுசிங் அண்ட் கொலாட்டரல் மேனேஜ்மென்ட் லிமிடெட் டி ஆர் எச் பி யை செபி யிடம் பதிவு செய்கிறது

சென்னை, 06 நவம்பர் 2024: ஸ்டார் அக்ரிவேர்ஹவுசிங் அண்ட் கொலாட்டரல் மேனேஜ்மென்ட் லிமிடெட் அதன் வரைவு டிராஃப்ட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸை (டி ஆர் எச் பி) சந்தைக் கட்டுப்பாட்டாளரான செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா (செபி)யிடம் தாக்கல் செய்துள்ளது.

இந்நிறுவனம் கொள்முதல், வர்த்தக வசதியாக்கள், கிடங்கு, இணை மேலாண்மை, நிதியியல் தீர்வுகள், டிஜிட்டல் சந்தையிடம் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான மதிப்பு கூட்டப்பட்ட தரவு சேவைகள் போன்ற சேவைகளை வழங்குகின்ற ஈடுபட்டுள்ள ஒரு தொழில்நுட்பம் தலைமையிலான ஒருங்கிணைந்த விவசாய மதிப்பு சங்கிலி சேவைகள் தளமாகும்.

இந்த நிறுவனம் ஆரம்ப பொது வழங்கல் மூலம் நிதி திரட்ட திட்டமிட்டுள்ளது. இந்த மொத்த வெளியீட்டு அளவு, மொத்தமாக ரூ. 4,500 மில்லியன் (450 கோடி) வரையிலான புதிய வெளியிடு மற்றும் மொத்தமாக 26,919,270 ஈக்விட்டி பங்குகள் வரையிலான விற்பனைக்கான வழங்கல் ("மொத்த வழங்கல் அளவு") ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த நிகர வருவாயை (வீ) ரூ. 1,200 மில்லியன் [ரூ.120 கோடி] என மதிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளுக்கு பகுதி நிதியளித்தல்; (வீவீ) ரூ.1250 மில்லியன் [ரூ.125 கோடி] என மதிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் மெட்டீரியல் துணை நிறுவனமான எஃப் எஃப் ஐ பி எல் இன் செயல்பாட்டு மூலதனத் தேவைகளுக்குப் பகுதி நிதியளித்தல் ; (வீவீவீ) ரூ.1,000 மில்லியன் [ரூ.100 கோடி] என மதிப்பிடப்பட்டுள்ள மெட்டீரியல் துணை நிறுவனமான ஏ எஃப் எல் இன் மூலதனத்தை பெருக்குவதற்கான நிதி உட்செலுத்துதல், மற்றும் மீதமுள்ள தொகை பொது நிறுவன நோக்கங்களுக்காக ஆகியவற்றின் நிதியளிப்புக்கு பயன்படுத்த இந்த நிறுவனம் முன்மொழிகிறது ("இந்த வழங்கலுக்கான நோக்கங்கள்").

இந்த விற்பனைக்கான வழங்கல், அமித் அகர்வால் இன் 1,318,126 வரையிலான ஈக்விட்டி பங்குகள், அமித் கோயல் இன் 4,393,754 வரையிலான ஈக்விட்டி பங்குகள், அமித் கண்டேல்வால் இன் 15,005 வரையிலான ஈக்விட்டி பங்குகள், சுரேஷ் சந்திரா கோயல் இன் 1,500,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், (ஒருங்கிணைந்த "முதலீட்டாளர் விற்பனை செய்யும் பங்குதாரர்கள்") தேவ்கினந்தன் குப்தா இன் 1,500,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், ஸ்ரீ கிருஷ்ணா அகர்வால் இன் 219,688 வரையிலான ஈக்விட்டி பங்குகள் , பிரமோத் அகர்வால் இன் 878,751 வரையிலான ஈக்விட்டி பங்குகள் , சுமித்ரா தேவி கோயல் இன் 500,000 அங்குஷ் குப்தா இன் 500,000 வரையிலான ஈக்விட்டி பங்குகள், (ஒருங்கிணைந்த "உருவாக்குநர் குழு விற்பனை செய்யும் பங்குதாரர்கள்"); மற்றும் க்ளே மோர் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (மொரிஷியஸ்) லிமிடெட் இன் 11,980,508 வரையிலான பங்குகள் (ஒருங்கிணைந்த "மொத்த விற்பனை பங்குதாரர்கள்") ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

ஜே எம் பைனான்சியல் லிமிடெட், அம்பிட் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஈக்யுரஸ் கேபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவை புக் ரன்னிங் லீட் மேனேஜர்கள் ஆவர். .

ஒருங்கிணைந்த விவசாய சேவைகளில் உள்ள நிறுவனங்களில், எஃப் & எஸ் அறிக்கையின்படி, 2022 முதல் 2024 வரையிலான நிதியாண்டின் போது, இந்த நிறுவனம் வருவாயில் மிகப்பெரியதாகவும் மற்றும் அதிக லாபம் ஈட்டும் தொழில்நுட்பம் கொண்ட ஒருங்கிணைந்த மதிப்பு சங்கிலி சேவை தளமாகவும் உள்ளது.

எஃப் & எஸ் அறிக்கையின்படி, ஜூன் 30, 2024 நிலவரப்படி, 4.5 முதல் 5.2 எம் எம் டி வரையிலான மிகப்பெரிய விவசாயக் கிடங்கு திறன் மூலம் சேவையளிக்கப்பட்ட ரூ.130 முதல் ரூ.165 பில்லியன் வரை ஏ யூ எம் இந்தியாவில் விவசாயப் பொருட்கள் அடிப்படையிலான நிதியளிப்பில் (கொலாட்டரல் மேனேஜ்மென்ட்) மிகப்பெரிய நிறுவனமாக இந்நிறுவனம் மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீராம் ஃபைனான்ஸ் நிறுவனம், ஜாம்பவான் ராகுல் டிராவிட் உடன் இணைந்து, 'ஒன்றுசேர்வேம்எழுவோம்' என்ற உந்துதலான விளம்பரத்தை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, 06 நவம்பர் 2024: ஸ்ரீராம் குழுமத்தின் பிரதான நிறுவனமாகவும், நிதிசார் சேவைகள் துறையில் இந்தியாவின் முன்னணி சேவை வழங்குநராகவும் உள்ள ஸ்ரீராம் ஃபைனான்ஸ் லிமிடெட், '#ஒன்றுசேர்வேம்எழுவோம்' என்ற பெயரில் உத்வேகம் அளிக்கும் ஒரு புதிய பிராண்டு விளம்பரப் படத்தை வெளியிட்டிருக்கிறது. பிணைப்பு மற்றும் ஒற்றுமையின் ஆற்றலை முன்னிலைப்படுத்தும் வகையில், வளர்ச்சி கண்டு வரும் இந்தியாவுடன் கூட்டாக இணைந்து செயல்படுவதில் ஸ்ரீராம் ஃபைனான்ஸின் அர்ப்பணிப்பை இவ்விளம்பரம் சித்தரிக்கிறது. இன்றைய காலகட்டத்தில் 'அதனால் என்ன?' என்ற கோட்பாட்டை பல இந்தியர்கள் பின்பற்றி வருகின்றனர்; வெற்றிக்கான தங்களது பயணத்தில் எப்படிப்பட்ட சவால்கள் வந்தாலும், அவற்றை சமாளித்து வெல்வதற்கான தளராத ஆர்வத்தையும், விருப்பத்தையுமே இது பிரதிபலிக்கிறது. ராகுல் திராவிட்டின் சொந்த வாழ்க்கையின் ஒரு நிகழ்வை சித்தரிக்கும் இந்த விளம்பரம், இந்தப் பேரார்வ உணர்வைக் கொண்டாடுவதையும், முன்னேறிச் செல்வதற்கான ஒரு வழிமுறையாக ஒன்று சேர்ந்து செயல்படுவதை வலியுறுத்துவதையும் இலக்காகக் கொண்டிருக்கிறது. இது வழங்கும் தெளிவான செய்தி: "ஒன்று சேர்வோம், எழுவோம். எங்கள் வாடிக்கையாளர்களுடன் உறுதியான உறவுகளை உருவாக்குவதன்மூலம் ஆற்றலைப் பெறவும், கனவுகளை நிஜமாக்கவும் நாங்கள் உதவுகிறோம்."

குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், தளராமல் துணிவுடன் மீண்டெழும் திறனைக் கொண்டிருப்பதற்கும் அடையாளமாக விளங்கும் கிரிக்கெட் ஜாம்பவான் ராகுல் திராவிட் ஸ்ரீராம் ஃபைனான்ஸ் - ன் பிராண்டு தூதராக இதில் இடம்பெறுகிறார். ஸ்ரீராம் ஃபைனான்ஸ் நிறுவனமும் இதே பண்பியல்புகளைக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற கூட்டாண்மைகளை பேணி வளர்ப்பதில் இந்த பிராண்டு கொண்டிருக்கும் பொறுப்புறுதியை ராகுல் திராவிட்டின் பங்கேற்பு மேலும் வலுப்படுத்துகிறது.

பிரபல நடிகர் நஸ்ருதீன் ஷா இந்த விளம்பரப் படத்தின் இந்தி பதிப்பிற்கு பின்னணிக் குரல் தந்திருக்கிறார். பல்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த பார்வையாளர்களோடு இதயத்தைத் தொடும் பிணைப்பு ஏற்படுவதை உறுதிசெய்யும் வகையில், தெலுங்கு மொழியிலான விளம்பரத்திற்கு அகாடமி விருது வென்ற திரு. கே.எஸ். சந்திரபோஸ் தன் பங்களிப்பை எழுத்துகளின் வழியாக வழங்கியிருக்கிறார். புகழ்பெற்ற பாடலாசிரியர் மதன் கார்க்கி, இந்த விளம்பரப் படத்திற்கான, இதயத்தைத் தொடும் தமிழ் வசனங்களை எழுதியிருக்கிறார் அர்த்தமுள்ள கூட்டாண்மைகளின் வழியாக, தனிநபர்கள் அவர்களது கனவுகளை நிஜமாக்க உதவுவது மீதான ஸ்ரீராம் ஃபைனான்ஸின் அர்ப்பணிப்பை இவரது வரிகள் அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறுகின்றன. அர்த்தமுள்ள கூட்டாண்மைகளின் வழியாக, தனிநபர்கள் அவர்களது கனவுகளை நிஜமாக்க உதவுவது மீதான ஸ்ரீராம் ஃபைனான்ஸின் அர்ப்பணிப்பை இவரது வரிகள் அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறுகின்றன.

இந்த விளம்பரப் பிரச்சாரம் குறித்து பேசிய ஸ்ரீராம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் நிர்வாக இயக்குநர் எலிசபெத் வெங்கட்ராமன், "'#ஒன்றுசேர்வேம்எழுவோம்' என்ற இவ்விளம்பரமானது, ஃபிக்ஸட் டெபாசிட், வாகனங்களுக்கான ஃபைனான்ஸ், சிறு வணிக நிறுவனங்களுக்கான ஃபைனான்ஸ் அல்லது கோல்டு லோன் அல்லது பர்சனல் லோன்கள் என எதுவாக இருந்தாலும், இந்திய நுகர்வோரின் விருப்பங்களுக்கும், கனவுகளுக்கும் ஆதரவாக நாங்கள் நிற்போம் என்ற எங்கள் வாக்குறுதியைப் பிரதிபலிக்கிறது; ஏழு மொழிகளில் உருவாக்கப்பட்டிருக்கும் எங்கள் படைப்புத்திறன் மிக்க அணுகுமுறையானது, நாடெங்கிலும் உள்ள பல்வேறு தரப்பினரோடும், ஆழமான பிணைப்பை நாங்கள் உருவாக்க எங்களுக்கு உதவும்." என்று கூறினார்.

# அப்போலோ மருத்துவமனை ஒருங்கிணைந்த நியூரோ-ஈஎன்டி வெர்டிகோ மற்றும் பேலன்ஸ் டிஸ்ஆர்டர்ஸ் க்ளினிக்கை அப்போலோ ஒன் மையத்தில் தொடங்குகிறது



சென்னை, 06 நவம்பர் 2024: மருத்துவ சேவையில் முன்னணியில் உள்ள அப்போலோ மருத்துவமனை, அப்போலோ ஒன் மையத்தில் அதன் ஒருங்கிணைந்த நியூரோ-ஈஎன்டி வெர்டிகோ மற்றும் பேலன்ஸ் டிஸ்ஆர்டர்ஸ் க்ளினிக்கை தொடங்குவதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்த புதுமையான க்ளினிக் நரம்பியல் நிபுணர்கள் மற்றும் ஈஎன்டி (காது மூக்கு தொண்டை) நிபுணர்களின் ஆழ்ந்த நிபுணத்துவத்தை ஒருங்கிணைக்கிறது. வெர்டிகோ, உடல் இயக்கத்தில் சமநிலையற்ற தன்மை (செயல்பாட்டு சமநிலைக் கோளாறு), விழுந்து விடுவோம் என்கிற அச்சம் போன்றவற்றைக் கொண்ட நோயாளிகளுக்கு மேம்பட்ட சிகிச்சையை இது வழங்கும். வீடியோனிஸ்டாக்மோகிராபி, வீடியோ ஹெட் இம்பல்ஸ் டெஸ்ட், கலோரி சோதனை மற்றும் மூளை இமேஜிங் உள்ளிட்ட அதிநவீன நோய் கண்டறியும் தொழில்நுட்பங்களை இந்தக் க்ளினிக் பயன்படுத்துகிறது. இதன் மூலம் நோயாளிகளின் உடல்நிலை குறித்து துல்லியமான மற்றும் விரிவான மதிப்பீடுகளை உறுதி செய்கிறது.

மேலும், சென்னை அப்போலோ மருத்துவமனை வெர்டிகோ உச்சி மாநாடு 2024 -ஐ டிசம்பர் 7, 8 ஆகிய தேதிகளில் சென்னை தாஜ் கோரமண்டலில் நடத்துகிறது. இந்த உச்சிமாநாடு வெஸ்டிபுலர், ஒகுலர் மோட்டார் மற்றும் உடல் இயக்க சமநிலை கோளாறுகளின் சிகிச்சையில் அண்மைக்கால முன்னேற்றங்களைப் பற்றி விவாதிப்பதற்காக முன்னணி நிபுணர்களை ஒருங்கிணைக்கும் தளத்தை உருவாக்குகிறது.

அப்போலோ மருத்துவமனைகள் குழுமத்தின் துணைத் தலைவர் ப்ரீத்தா ரெட்டி கூறுகையில், "இந்தியாவில் அதிகம் கவனிக்கப்படாத ஒரு முக்கியமான சுகாதாரப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான ஒரு அத்தியாவசிய நடவடிக்கையாக ஒருங்கிணைந்த நியூரோ- இ.என்.டி வெர்டிகோ மற்றும் பேலன்ஸ் டிஸ்ஆர்டர்ஸ் க்ளினிக் தொடங்கப்பட்டுள்ளது. அப்பல்லோ ஒன் -ல் இம்முயற்சியை அறிமுகப்படுத்துவது மிக முக்கியமான முன்னெடுப்பாகும். ஏனெனில் இது தடுப்பு சுகாதார சோதனைகள் மூலம் முன்கூட்டியே கண்டறிந்து, அதற்கான மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது. இதன் மூலம், இப்பிரச்சினையானது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை கடுமையாக பாதிக்கும் முன் இதன் நிலைமை குறித்து அடையாளம் காணவும் உதவுகிறது. எங்களது ஆழ்ந்த அறிவும், அனுபவமும் உள்ள மருத்துவர்களின் நிபுணத்துவத்துடன் அதிநவீன தொழில்நுட்பத்தை ஒன்றிணைப்பதன் மூலம், இச்சிகிச்சைகளில் உயரிய தரத்தை வழங்கவேண்டும் என்பதை இலக்காக கொண்டிருக்கிறோம். மேலும், நாடு முழுவதும் நோயாளிகளை மையமாகக் கொண்ட மேம்பட்ட, சுகாதார சேவையை அளிப்பதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம். உடல்நலப் பராமரிப்பில் முன்னணியில் இருக்கும் அப்போலோ மருத்துவமனைகள், எங்களிடம் சிகிச்சைப் பெறும் நோயாளிகளுக்கு உயரிய சிகிச்சையை வழங்குவதற்காக தொடர்ந்து எங்களது திறன்களையும், தொழில்நுட்பங்களையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம்'' என்றார். மேலும், இது தொடர்பான விழிப்புணர்வை ஊக்குவிக்க டிசம்பர் 9-ம் தேதி ஒரு 'சைக்ளத்தான்' நடைபெறும். வானகரம் அப்போலோ மருத்துவமனையில் காலை 6.30 மணிக்கு தொடங்கும். இந்நிகழ்ச்சி மதியம் 1.30 மணிக்கு நிறைவடையும். சைக்ளத்தானை பாண்டிச்சேரி ஆளுநர் கைலாசநாதன் கொடியசைத்துத் தொடங்கி வைக்கிறார். ஓய்வு பெற்ற காவல்துறைத் தலைவர் சைலேந்திர பாபுவும் இதில் கலந்து கொள்கிறார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளி, டிசம்பர் 06, 2024

## சவூதி அரேபியாவில் உள்ள ஒரு தாமிர ஆலைக்கு 2 பில்லியன் டாலர்களை வேதாந்தா நிறுவனம் ஏன் முதலீடு செய்கிறது?

சென்னை, 06 நவம்பர் 2024: கடந்த வாரம், வேதாந்தா லிமிடெட் நிறுவனத்தின் ஒரு முழுச் சொந்தமான துணை நிறுவனமான வேதாந்தா காப்பர் இன்டர்நேஷனல், சவுதி அரேபியா இராஜ்ஜியத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, அங்கு ஒரு குறிப்பிடத்தக்க செப்பு திட்டங்களை அமைப்பதற்காக $2 பில்லியன் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தில் ஆண்டுக்கு ஒரு 400,000 டன் கிரீன்ஃபீல்ட் தாமிர உருக்காலை மற்றும் சுத்திகரிப்பு நிலையமும், ஆண்டுக்கு ஒரு 300,000 டன் செப்பு கம்பி திட்டமும் அடங்கும். இந்த இராஜ்ஜியத்தின் தாமிர தேவை தற்போது ஆண்டுக்கு 365,000 டன்னாக உள்ளது, இது தற்போது முதன்மையாக இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. உலோகத்திற்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், சவூதி அரேபியாவில் உள்ள வேதாந்தா நிறுவனத்தின் தாமிர அலகு நாட்டின் இறக்குமதியை கணிசமாகக் குறைக்க உதவும். இந்த தாமிர உருக்கி மூல செப்பு தாதுவை சுத்திகரிக்கப்பட்ட உலோகமாக மாற்றும் அதே வேளையில் சுத்திகரிப்பு நிலையம் அசுத்தங்களை அகற்றி, தொழில்துறை பயன்பாட்டிற்கு தயாராக இருக்கும் உயர்தர தாமிரத்தை உற்பத்தி செய்யும். பின்னர், இந்த செப்பு கம்பி ஆலை அந்த சுத்திகரிக்கப்பட்ட தாமிரத்தை கம்பிகளாக மாற்றும், பின்னர் அதை கேபிள்கள் மற்றும் பிற பொருட்களை தயாரிக்க பயன்படுத்தலாம்.

சவுதி அரேபியாவின் இலாபம் இந்தியாவின் இழப்பாக இருக்கிறது. மத்திய கிழக்கில் தாமிர செயல்பாடுகளை அமைக்கும் திட்டத்தை அறிவிக்கும் முன், வேதாந்தா தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் ஒரு தாமிர ஆலையை நடத்தி வந்தது. அதன் உச்சத்தில், வேதாந்தாவின் ஸ்டெர்லைட் தாமிர ஆலை ஒவ்வொரு ஆண்டும் 400,000 டன் தாமிரத்தை உற்பத்தி செய்தது, இது இந்தியாவின் 40% தாமிர தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இருந்தது. உலோகத்திற்கான தேவை அதிகரிப்பைப் பூர்த்தி செய்ய இந்த நிறுவனம் அதன் அடுத்த சுற்று விரிவாக்கத்தையும் திட்டமிட்டுகின்றது. இருப்பினும், ஸ்டெர்லைட் காப்பர் ஒரு சுற்றுச்சூழல் சர்ச்சையின் நடுவில் சிக்கியது மற்றும் தொடர்ச்சியான துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் இறுதியில் ஆலையை மூடுவதற்கு வழிவகுத்தன. வேதாந்தா நிறுவனத்தின் வருவாய்கள் மற்றும் 30,000 நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் மீது அதன் நேரடி தாக்கம் தவிர, இந்த ஆலை மூடல் வெறும் ஒரு நிதியாண்டில் அடுத்த ஏற்றுமதியாளரிடமிருந்து தாமிரத்தை நிகர இறக்குமதி செய்யும் நாடாக இந்தியாவை மாற்றியது. இந்தியாவின் நிகர தாமிர ஏற்றுமதி, நிதியாண்டு 18 இல் 180,000 டன்னாக இருந்தபோது, இந்த நாடு நிதியாண்டு 19 இல் ஒரு வியப்பூட்டும் 283,000 டன்களின் இறக்குமதியுடன் நிகர இறக்குமதியாளராக மாறியது. நிதியாண்டு 23 இல் ஏற்றுமதி வெறும் 61,000 டன்னாகச் சுருங்கியதாலும் மொத்த இறக்குமதி 275,000 டன்னாக இருந்தது.

சவூதி அரேபியாவுக்குள் நுழைவதன் மூலம், வேதாந்தா மீண்டும் தாமிரத்தில் பெரிய அளவில் நம்பிக்கையுடன் இருக்கிறது, ஏனெனில் உலோகம் அதன் பரவலான பயன்பாடுகள் காரணமாக தேவையில் மிகப்பெரிய எழுச்சியைக் காணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மின்சார வாகனங்கள் முதல் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வரை மற்றும் மின் பரிமாற்றத்திலிருந்து உள்கட்டமைப்பு வரை, தாமிரம், வயரிங், உபகரணங்கள், கேபிள்கள் மற்றும் ணிகூஷி பேட்டரிகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, சோலார் பண்ணை ஒரு ஜிகாவாட் திறனுக்கு சுமார் 2.4 டன் தாமிரத்தைப் பயன்படுத்துகிறது, அதே சமயம் கடலோர காற்றாலைகளுக்கு, விசையாழிகளுக்கு ஒரு ஜிகாவாட்டுக்கு 13.5 டன்கள் வரை தேவைப்படும். உலோகத்திற்கான இந்த சுரங்க குழுமம் சாம்பியாவில் அதன் கொங்கோலா தாமிரச் சுரங்கத்தின் கட்டுப்பாட்டையும் மீண்டும் பெற்றுள்ளது. அதன் கணிசமான வளங்களுடன், வேதாந்தா நிறுவனத்தின் சவூதி நடவடிக்கைகளுக்கு தாமிர செறிவூட்டலின் ஒரு நிலையான ஆதாரமாக ரிசிவி மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாந்தா நிறுவனத்துடன் கூட்டு சேர்வது சவூதி அரேபியாவிற்கும் பயனளிக்கிறது, ஏனெனில் அது 2030 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் 50% உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. நாட்டிற்குள் அபரிதமான தாமிரம் கிடைப்பது, இந்த இராஜ்ஜியம் இறக்குமதியில் சார்ந்திருப்பதைக் குறைக்கின்ற அதே வேளையில், சோலார் பண்ணைகள், காற்றாலை விசையாழிகள் மற்றும் மின் இணைப்புகள் ஆகியவற்றிற்கான இந்த உலோகத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவும். சவூதி அரேபியா அதன் உள்ளூர் தேவையை பூர்த்தி செய்த பிறகு உலகளாவிய விநியோகச் சங்கிலியில் ஒரு முக்கிய பங்கேற்பாளராக மாறவும் வாய்ப்புள்ளது.

இந்தியா ஒரு முழுமையாக செயல்படும் தாமிர உருக்காலையை இழந்து ஒரு நிகர இறக்குமதியாளராக மாறியுள்ள நிலையில், சவூதி அரேபியாவில் ஒரு தாமிர ஆலையின் இந்த நிர்மாணம் நம்பகமான மற்றும் நிலையான சுத்திகரிக்கப்பட்ட தாமிரத்தின் ஆதாரத்தை நமக்கு வழங்கலாம் மற்றும் சீனாவை கடுமையாக சார்ந்திருப்பதைக் குறைக்கலாம்.

## 20வது நெக்சஸ் பிசினஸ் இன்குபேட்டர் கூட்டமைப்பிற்கான ஆட்சேர்ப்பு தொடங்குவதாக அமெரிக்கத் தூதரகம் அறிவிப்பு

சென்னை, 06 நவம்பர் 2024: புதுதில்லியில் உள்ள அமெரிக்கன் சென்டரில் ஃபிப்ரவரி 2, 2025-இல் நடத்தப்படும் பிரதான பிசினஸ் இன்குபேட்டரான நெக்சஸ், 20வது கூட்டமைப்பிற்கான விண்ணப்பங்களை தற்போது ஏற்றுக்கொள்கிறது என்று புதுதில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறது.

நெக்சஸ் கோஹார்ட் திட்டம், 15-இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு, அவர்களது மதிப்பீட்டு முன்மொழிவுகளை மேம்படுத்தவும், அவர்களது இலக்கு சந்தைகளை வரையறுக்கவும், தயாரிப்பு/தொழில்நுட்பம் குறித்த சந்தைப் பின்னூட்டங்களைப் பெறவும், தங்கள் நிறுவனங்களை சந்தைக்குக் கொண்டுவருவதற்கான மைல்கற்களை உருவாக்கவும் இந்திய மற்றும் அமெரிக்க நிபுணர்களிடம் இருந்து சிறப்புப் பயிற்சியைப் பெறுவதற்கான விலைமதிப்பற்ற வாய்ப்பை வழங்குகிறது. இந்த நவீன கூட்டமைப்பில் தொடக்க முயற்சிகளில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மற்றும் தொழில்முனைவோரிடையே மனம் சார்ந்த ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்தும் ஆராயப்படும்.

தொடக்கத்திலுள்ள ஒன்பது வார பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்து நான்கு நிறுவனங்கள் வரை மேலும் ஆழமான துணையாதாரம் வழங்குவதற்காக நெக்சஸ்-இல் நீடிக்க வாய்ப்பளிக்கப்படும். இந்நிறுவனங்களுக்கு மேலும் எட்டு மாதங்கள் வரை இன்குபேட்டர் மற்றும் நெட்வொர்க்வசதிகள் வழங்கப்படும். இச்சமயத்தில், நெக்சஸ் நிபுணர்கள் குழு அவர்களுடன் இணைந்து பணியாற்றி அவர்களது தயாரிப்புகளை சந்தைக்குக் கொண்டு வரவும், வாடிக்கையாளர் மற்றும் வருவாய்த் தளங்களை வளர்க்கவும், பொருத்தமாக அமையும் பட்சத்தில், அவர்களது செயல்பாடுகளை விஸ்தரிப்பதற்கான நிதியைப் பெறவும் உதவுவதன் மூலம் அந்நிறுவனங்களை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வார்கள்.

இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர் விண்ணப்பங்களை www.startupnexus.in இணையதளத்தில் ஜனவரி 5, 2025-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு ஜனவரி 17, 2025-க்குள் தெரிவிக்கப்படும்.

நெக்சஸ்-இன் 20வது கூட்டமைப்பிற்கான பயிற்சியை வழங்க, அமெரிக்கத் தூதரகம் கனெக்டிகட் பல்கலைக்கழகத்தில் (யூ-கான்) உள்ள உலகளாவிய பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் (ஜி டி டி ஐ) இணைந்துள்ளது. புது தில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறையின் மானியத்தின் மூலம் இத்திட்டத்திற்கு நிதியளிக்கப்படுகிறது. யூ-கான்ஸ் ஸ்கூல் ஆஃப் பிசினஸில் உள்ள டைகிள் லேப்ஸுடன் இணைந்து ஜி டி டி ஐ, இந்தியா முழுவதிலும் உள்ள பங்கேற்பாளர்களுக்கு புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்முயற்சிகளின் வளர்ச்சியை ஆராய்வதற்கான பார்வைகளையும் முக்கியக் கருவிகளையும் வழங்குகிறது. அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான கலாச்சார மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் அதே வேளையில் நிலையான சமூக மேம்பாட்டிற்குப் பங்காற்றுவதே கூட்டாண்மையின் நோக்கமாகும்.

2017-ஆம் ஆண்டு முதல் குழு தொடங்கப்பட்டதில் இருந்து, 230 இந்திய தொழில்முனைவோர் மற்றும் 19 கூட்டமைப்புகள் நெக்சஸ் - இல் தேறியுள்ளனர், மேலும் கூட்டாக $90 மில்லியன் டாலர்களை வெளிமுக நிதித் திரட்டலில் தொழில்முனைவோர் பெற்றுள்ளனர்.

## சிதைவுள்ள வால்வு செயலிழப்பு மற்றும் இடுப்பெலும்பு முறிவால் அவதியுற்ற 76 வயதான விவசாயிக்கு நடமாட்டத்திறனை திரும்பவும் வழங்கிய நுட்பமான ஹைபிரிட் சிகிச்சை செயல்முறைகள்




சென்னை, 06 நவம்பர் 2024: மேம்பட்ட மருத்துவ சிகிச்சைக்காக பிரபலமாக அறியப்படும் காவேரி மருத்துவமனை, தமிழ்நாட்டின் மயிலாடுதுறையைச் சேர்ந்த 76 வயதான ஒரு முதிய நோயாளிக்கு இரு மருத்துவ செயல்முறைகளை ஒரே நேரத்தில் வெற்றிகரமாக மேற்கொண்டதன் வழியாக மற்றுமொரு சாதனையை நிகழ்த்தியிருக்கிறது. ஆசிரியராகவும், விவசாயியாகவும் முன்பு பணியாற்றிய இவர், அவரது நடமாட்டத் திறனை மற்றும் தனித்து இயங்கும் சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கான இந்த மருத்துவ பயணத்தில் நம்பிக்கையையும், திடகாத்திர மனதையும் நேர்த்தியாக வெளிப்படுத்தியிருக்கிறார். 2013-ம் ஆண்டில் பயோப்ரோஸ்தெடிக் வால்வு வழியாக மிட்ரல் தடுக்கிதழ் மாற்றுச்சிகிச்சை இந்நோயாளிக்கு செய்யப்பட்டிருந்தது. சமீபத்தில் எடுக்கப்பட்ட எக்கோ சோதனை, அந்த செயற்கை வால்வு சிதைவடைந்திருப்பதையும், கடுமையாக குறுகியிருப்பதையும் வெளிப்படுத்தியது. அத்துடன், வலது இதயத்தில் மிக அதிக (கடுமையான நுரையீரல் மிகை இரத்தஅழுத்தம்) என்ற பிரச்சனையும் இவருக்கு இருந்தது. இந்த வால்வை மாற்றுவதற்காக இரண்டாவது அறுவைசிகிச்சையை செய்வது, இவரது முதுமை மற்றும் உடல்நிலையின் காரணமாக அதிக ஆபத்தானதாக இருந்ததால், அறுவைசிகிச்சையின்றி டிரான்ஸ்கதீட்டர் மிட்ரல் வி ஐ வி மாற்று சிகிச்சையை நவம்பர் மாத இறுதியில் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், எதிர்பாராத விதமாக வீட்டில் கீழே விழுந்ததனால், இடதுகாலில் தொடை எலும்பின் கழுத்துப் பகுதியில் (உடைந்த இடுப்பெலும்பு) எலும்பு முறிவு ஏற்பட்டது இவரது நிலையை சிக்கலாக்கியது. இவரது இடுப்பெலும்பு முறிவுக்கும் இதய பாதிப்பின் ஆபத்தான நிலைக்கும் தீர்வு காண்பது பெரிய சவாலை ஏற்படுத்தியது. பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படுகின்ற ஒரு அதிக ஆபத்தான மருத்துவ செயல்முறையாக இவை இருந்தது. இடுப்பெலும்பு மற்றும் இதயம் சார்ந்த இரு மருத்துவ செயல்முறைகளையும் ஒரே பொது மயக்க மருந்து (அனஸ்தீசியா) வழங்கலின் கீழ் மேற்கொள்வதே ஒரே பாதுகாப்பான வழியாக இருந்தது. ஹைபிரிட் (கலவை), கேத்லேப் அறுவைசிகிச்சை அறையில் முதலில் டிரான்ஸ்கதீட்டர் மிட்ரல் வி ஐ வி செயல்முறையையும் மற்றும் அதைத் தொடர்ந்து இடதுபுற முழு இடுப்பெலும்பு மாற்று சிகிச்சையையும் செய்வதென செய்யப்பட்டது. இத்தகைய வசதியும், திறனும் இந்தியாவில் வெகுசில மருத்துவ மையங்களில் மட்டுமே கிடைக்கிறது. ஹைபிரிட் கேத்லேப் அறுவைசிகிச்சை அறை, இதய மற்றும் எலும்பியல் சிகிச்சையில் சிறந்த நிபுணத்துவம் இம்மருத்துவமனையில் இருப்பதால், இம்முதிய நோயாளிக்கு இம்மருத்துவ செயல்முறைகள் பாதுகாப்பாக செய்யப்பட்டன.

இச்சிகிச்சைகள் முடிவடைந்து, 36 மணி நேரங்களுக்குள் இவர் இயல்புநிலைக்கு திரும்பினார். "இடுப்புக்கூடு வழியாக மேற்கொள்ளப்பட்ட டிரான்ஸ்கதீட்டர் மிட்ரல் வால்வு - இன் - வால்வு செயல்முறை, குறைந்த ஊடுருவல் கொண்ட இந்த நவீன உத்தியைப் பயன்படுத்தி, இந்நோயாளிக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. குறைந்த ஊடுருவல் உள்ள இந்த உத்தி, அவரது வலதுபக்க இதய அழுத்தத்தை 103-லிருந்து 60 ஆக உடனடியாக குறைத்து, மிட்ரல் தடுக்கிதழ் வால்வு மீண்டும் இயல்பாக செயல்படத் தொடங்கியது. இவரது இதய பாதிப்புநிலை சரிசெய்யப்பட்டவுடன், எலும்பியல் துறை மருத்துவர்களது குழு, அதே அறுவைசிகிச்சை அறையின் அதே அறுவைசிகிச்சை மேஜை மீதே அவருக்கு இடுப்பெலும்பு மாற்று அறுவைசிகிச்சையை மேற்கொண்டது." என்று சென்னை காவேரி மருத்துவமனையின் முதுநிலை இடையீட்டு இதயவியல் நிபுணர் டாக்டர். அனந்தராமன் கூறினார். இம்மருத்துவ செயல்முறைகள், சிறப்பான வெற்றியுடன் நல்ல சிகிச்சை விளைவுகளை வழங்கியிருக்கின்றன. இச்செயல்முறைகள் முடிவடைந்ததிலிருந்து 36 மணி நேரங்களுக்குள் செயற்கை சுவாச சாதன இணைப்பு அகற்றப்பட்டது மற்றும் இயல்புநிலைக்கு அவர் திரும்பினார். இவரது துரிதமான மீட்சி, அவரது சொந்த ஊருக்கு திரும்பிச் செல்லவும் மற்றும் அவரது சுறுசுறுப்பான செயல்பாடுகளை வழக்கம்போல் மேற்கொள்ளவும் ஏதுவாக்கியிருக்கிறது. "பல உடல்நலச் சிக்கல்கள் இருக்கும் நோயாளிகளுக்கு கூட, அறுவைசிகிச்சை உத்திகளில் நிகழ்ந்துள்ள புதிய முன்னேற்றங்கள், சிகிச்சைகளை அதிக பாதுகாப்பானதாக மாற்றியிருக்கின்றன.

இந்நோயாளிக்கு ட்யூவல் மொபிலிட்டி இடுப்பெலும்பு மாற்று சிகிச்சை செய்யப்பட்டிருப்பதால், இடுப்பெலும்பு அதிக ஆண்டுகள் செயல்படும்; எதிர்காலத்தில் சிக்கல்கள் வருவதற்கான வாய்ப்புகளையும் இது குறைத்திருக்கிறது. ஒரு விவசாயியாக அறுவடைப் பருவத்திற்கு முன்னதாகவே தயாராகவும் மற்றும் சிறப்பான நடமாட்டத்திறன் வேண்டுமென்றும் அவர் விரும்பினார். ஆகையால் டூயூவல் மொபிலிட்டி செயல்முறை வழியாகவே இதை அடையமுடியும் என்பதால், இந்த உத்தி இந்நோயாளிக்கு செயல்படுத்தப்பட்டிருக்கிறது." என்று ஆழ்வார்பேட்டை, காவேரி மருத்துவமனையின் எலும்பியல் துறை முதுநிலை நிபுணர் டாக்டர். கே. முகுந்த் கூறினார். "பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த சிறப்பான சிகிச்சைக்கு இந்த நேர்வு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாகும். சிக்கலான இதய சிகிச்சை மற்றும் எலும்பியல் செயல்முறைகளை ஒரே அமர்வில் மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு, இந்நோயாளியின் மருத்துவ தேவைகளுக்கு தீர்வை வழங்கியிருக்கிறது; அத்துடன், வேகமாக குணமடைந்து இயல்புநிலைக்கு திரும்புவதை உறுதி செய்திருக்கிறது. எமது நவீன, ஹைபிரிட் அறுவைசிகிச்சை அறை, உயிரை காக்கக்கூடிய இத்தகைய மருத்துவ செயல்முறைகளை சிரமமின்றி எளிதாக மேற்கொள்ளவும், அதன் மூலம் புதுப்பிக்கப்பட்ட பலத்தோடு அவரது இயல்பு வாழ்க்கைக்கு நோயாளி திரும்புவதையும் சாத்தியமாக்கியிருக்கிறது." என்று காவேரி மருத்துவமனைகள் குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் செயலாக்க இயக்குனர் டாக்டர். அரவிந்தன் செல்வராஜ் கூறினார்.